பெயர்: .........................                                    தேதி: .........................

# அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தையை சரியான வேற்றுமை உருபுடன் இணைத்து எழுது.

**சான்று:-** (வேணி) ________ அசைவச் சாப்பாடு பிடிக்கும்.

**வேணிக்கு** அசைவச் சாப்பாடு பிடிக்கும்.

1. உனது (அறை) ________ எத்தனை கடிகாரங்கள் உள்ளன.

2. சிலம்பம் (தமிழர்கள்) ________ ஒரு வீர விளையாட்டு.

3. ராகவன் காலை ஐந்து (மணி) ________ எழுவார்.

4. நான் தினமும் தொலைக்காட்சியில் (செய்தி) ________ ப் பார்ப்பேன்.

5. (விலங்குகள்) ________ அரசன் சிங்கம்..

6. எனது (தோட்டம்) ________ அவரைக்கொடி பூத்திருந்தது

7. பறவைகள் (கூடுகள்) ________ த் திரும்பின.

8. குழந்தைகள் (மழைநீர்) ________ காகிதக் கப்பல்களை மிதக்கவிட்டனர்.

9. அவர் (சென்னைப்பல்கலைக்கழகம்) ________ பணிபுரிகிறார்.

10. (ஆறு) ________ வெள்ளம் வந்தது.

11. (பெட்டி) ________ ஒரு கரடி பொம்மை இருந்தது,

12. (நாய்) ________ மோப்பசக்தி அதிகம்.